
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1206

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

**160**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த அன்பில் பொய்யாமொழி அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# அன்பில் பொய்யாமொழி கழகத் தலைவரின் வலது கரம்!

“எப்போதும் சிரித்த முகம், சிற்றெறும்பு போல சுறுசுறுப்பு, மாநில இளைஞர் அணியின் மாவீரர்களில் தலைசிறந்து விளங்கிய பொய்யாமொழி” என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு. திருச்சி மாவட்டத்தில், கலைஞருடன் இணைந்து கழகம் வளர்த்த தளகர்த்தர் அன்பில் தர்மலிங்கத்தின் மூத்த மகன். கழக இளைஞர் அணியில் இணைச் செயலாளராக , அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களோடு இணைந்து பயணித்த நெருங்கிய நண்பர். முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பிற்கும் பாசத்திற்கும் பாத்திரமான பொய்யாமொழி.

கழகத்துக்கும் அன்பில் பொய்யாமொழிக்குமான பற்றினைக் கழகத்தினர் அறிவர். நங்கவரம் போராட்டத்தில் உழவர்களோடு உழவராக, கலைஞர் சேற்றுவயலில் இறங்கியபோது, கூடவே கைக்குழந்தையோடு இறங்கினார், அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டச் செயலாளர், கழக முன்னோடி அன்பில் தர்மலிங்கம். அந்தக் கைக்குழந்தைதான் பொய்யாமொழி என கழகத்தினர் அறிவர்.

அதுபோலவே, தலைவருக்கும் அன்பில் பொய்யாமொழிக்குமான நட்பினையும் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் அறிவர். குடும்பம், கட்சி, அரசியல், எனப் பலவற்றையும் ஒளிவுமறைவின்றி மனம் விட்டு பேசிக்கொள்ளும் அளவுக்கு இருவருடைய நட்பும் இருந்தது. கழகத் தலைவர் அவர்களை தொடக்ககாலம் தொட்டே தலைவரே… தலைவரே என அழைத்தவர், அவருடைய நண்பர் பொய்யாமொழிதான். அதனால்தானோ என்னவோ, கழகத் தலைவர் அவர்கள் முதன்முதலாகத் தலைமைப் பொறுப்பேற்ற ஆகஸ்ட் 28-ஆம் தேதி, பொய்யாமொழி அவர்களின் நினைவு நாளாகவும் இயல்பாக அமைந்தது. அந்தத் தேதி தற்செயலாக அமைந்தாலும், பொய்யாமொழியின் வாக்கினை நெடுங்காலத்துக்குப் பின்னர், அவரது நண்பராகவும் நிறைவேற்றினார் கழகத் தலைவர்.

### அண்ணா, கலைஞர் மடிகளில் அரசியல்

1954-ஆம் ஆண்டில் பிறந்தவர் பொய்யாமொழி, போராட்டக் களங்களுக்கு கைக்குழந்தையாகத் தூக்கிச்செல்லத் தொடங்கி, அதுவே, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட கழக முன்னோடிகளின் மடியில் அரசியல் கற்றுக்கொண்டவராக வளர்ந்தவர். இன்றைய கழகத் தலைவர் அவர்களின் நட்பு வட்டத்துக்குள் 70-களிலேயே சேர்ந்தவருக்கு, கோபாலபுரமே இன்னொரு தாய்வீடாக இருந்தது.

திருச்சி கிராப்பட்டியில் அமைச்சர் அன்பிலார் இல்லத்திற்குக் கோரிக்கை மனுவுடன் யார் சென்றாலும் சிரித்த முகத்துடன் வரவேற்று, அவர்கள் முன் வைக்கும் கோரிக்கைகளுக்கு அன்பிலார் கவனத்துக்குக் கொண்டுசென்று, அந்த இடத்திலேயே தீர்வு பெற்றுக் கொடுப்பவர். எல்லோரிடமும் சரிசமமாகப் பழகும் பண்பினை இளம் வயதிலேயே கற்றுக்கொண்டதுடன், கழகப் பற்றினைக் குடும்பப் பற்றாகக் கொண்டு, கழகத்தினருடன் இணக்கமாகப் பணியாற்றியவர்.

### இளைஞர் அணியில் நிழல் பயணம்

நூற்றுக்கணக்கான இளைஞர்களைக் கட்சியிலும் தனிப்பட்ட முறையிலும் கைகொடுத்து மேலே உயர்த்தியவர். கழகத்தின் இளைஞர் அணியின் தொடக்க நாட்களில், ஒவ்வொரு ஊரிலும் இளைஞர் அணிக்குக் கிளையை உருவாக்கவும் வளர்ச்சிக்காகவும் தமிழ்நாடு முழுவதும் இளைஞர் அணி ஒருங்கிணைப்புக் குழுவாக, அணிச் செயலாளராகப் பயணித்த இன்றைய கழகத் தலைவர் அவர்களுடன், அவரின் நிழலாக இருந்து பயணித்தவர். தொடக்க நாட்களில், ஒவ்வொரு நாளும் இருநூறு, முன்னூறு கிலோ மீட்டருக்கு மேல் காரில் பயணித்த கழகத் தலைவர் அவர்களுடன் சக கொள்கை நேசராகச் சுற்றிச்சுழன்றவர்.




“நாளைக்கு எந்த ஊருக்கு வரவுள்ளோம் என பொய்யாமொழி அண்ணன் தொலைபேசியில் சொல்வார். நாங்கள் தயாராக இருப்போம் ‘கல்வெட்டு நட்டு இரும்பு போஸ்டில் கொடிமரம் நட்டால் பல ஆண்டுகள் நிற்கும். அப்படி அது இருக்கும் வரை அந்தக் கொடிக்கம்பமும் ஒரு தி.மு.க.காரனைப் போல்தான்’ என பொய்யாமொழி கூறியதைக் கழக மேடையில் குறிப்பிட்டுள்ளார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ராஜன் அவர்கள்.

கழகத் தலைவரின் அன்றைய கார் பயணங்களைக் குறிப்பிடும், கழகத்தின் இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை அவர்கள், “உயிருக்கு அச்சுறுத்தல் வரும் சூழ்நிலைகளில், சாமர்த்தியமாக கார் ஓட்டி, கழகத் தலைவர் உள்பட இளைஞர் அணி நிர்வாகிகள் உயிரைக் காப்பாற்றுவார் பொய்யாமொழி” என்று குறிப்பிட்டுள்ளார்.

> “கழக இளைஞர் பட்டாளம், அன்பில் பொய்யாமொழியின் துடிப்பையும், தூய கொள்கை உறுதியையும் தொடர்ந்து கொண்டிருப்பதே அந்த வீர இளைஞனுக்கு வழங்கும் காணிக்கையாக அமையும்!”

### எளிமை விரும்பி

தந்தை அமைச்சராக இருந்தவர், முத்தமிழறிஞர் கலைஞரின் நெருங்கிய நண்பர், இவரோ இளைஞர் அணிச் செயலாளருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தவர் என்றாலும் எளிமை விரும்பி. எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலகட்டத்தில் கழகத்தின் வளர்ச்சிக்கு ஓயாது உழைத்த பொய்யாமொழி அவர்களை 1989-ஆம் ஆண்டில் திருச்சியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

‘சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தன் தந்தை அன்பில் தர்மலிங்கத்தைப் போலவே, மக்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பு’ எனக்கருதி செயல் பட்டவர் பொய்யாமொழி என கலைஞரிடம் பாராட்டுப் பெற்றார். அப்படியான பணிச் சிறப்புதான், 1996-ஆம் ஆண்டில் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக்கி செயல்பட வைத்தது. அப்போதும் இளைஞர் அணியில் களப்பணியாளராக அவரது பணிகள் பல ஆயிரம் இளைஞர்களைக் கழகத்திற்குக் கொண்டுவந்து சேர்த்துள்ளது.

1999-ஆம் ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தலின்போது, ஆகஸ்ட் 27 அன்று இரவு திருச்சியில் தேர்தல் பிரச்சாரம். முத்தமிழறிஞர் கலைஞர் மேடையில் உரையாற்ற, அந்த மேடையைச் சிறப்பாக்க ஊக்கத்துடன் உழைத்த தம்பியர்களில் ஒருவராக, சிரித்த முகத்துடன் அமர்ந்திருக்கிறார், அன்பில் பொய்யாமொழி. அதுதான் அவருக்கு கழகப் பயணத்திலும், வாழ்க்கைப் பயணத்திலும் இறுதிமேடை என யாரும் நினைக்கவில்லை. விடியற்காலையில் அவர் உயிர் பிரிந்தது. 48 வயதில் மறைந்த அந்த மறத்தமிழ் வீரன் மறைந்த செய்தி கேட்டு, திருச்சி நகரமே சோக வடிவாய் உருவானது.

கலைஞரின் தேர்தல் பிரச்சாரம் ரத்து செய்யப்பட்டது, தேனியில் சுற்றுப்பயணம் சென்றிருந்த இன்றைய கழகத் தலைவர் அவர்கள், அவற்றை ரத்து செய்துவிட்டு ‘தனது வலதுகரம் ஒன்று போய்விட்டதே’ என ஆறுதலற்று வந்து நின்றார். “என் பிள்ளைகளில் ஒருவரை இழந்துவிட்டேன். புத்திர சோகத்தால் புழு போலத் துடிக்கும் என்னையும் என் குடும்பத்தாரையும் யார்தான் ஆறுதல் சொல்லித் தேற்ற முடியும்” என்று நா தழுதழுத்தார் கலைஞர்.

பொய்யாமொழி அவர்கள் இன்று இருந்திருந்தால், கழகத் தலைவருக்கு பக்கபலமாகப் போர்ப்படைத் தளபதியாக விளங்கியிருப்பார். ஆனால், காலம் அந்த வாய்ப்பை வழங்கவில்லை என்றாலும், அவர் விட்டுச்சென்ற பணிகளை அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழியாக நிறைவேற்றிக் கொள்கிறது.

“கழக இளைஞர் பட்டாளம், அன்பில் பொய்யாமொழியின் துடிப்பையும், தூய கொள்கை உறுதியையும் தொடர்ந்து கொண்டிருப்பதே அந்த வீர இளைஞனுக்கு வழங்கும் காணிக்கையாக அமையும்” என்று கலைஞர் எழுதிய இரங்கல் குறிப்புக்கு என்றும் உயிர் இருக்கும்.

## அறநிலையத் துறைக்கு ஆபத்தா?

காலம் காலமாக அறநிலையத் துறையை ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள ஒரு பிரிவைச் சார்ந்தவர், அறநிலையத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதால், புதிய அரசுக்குக் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.


இது தொடர்பாகப் பதிவிட்டுள்ள எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா, “தமிழ்நாடு அமைச்சரவையில் முன்னெப்போதும் இல்லாதபடி பட்டியல் சாதியினருக்கான பிரதிநிதித்துவம் கூடியுள்ளது. அதனாலேயே, அது பலதரப்பாலும் விவாதிக்கப்படுகிறது. மக்கள்தொகையில் 18-20 சதவிகிதமுள்ள பட்டியல் சாதியினரை, பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய தனித்தொகுதி உறுப்பினர்களில் சற்றேறக்குறைய அதே சதவிகித அளவுக்கானவர்கள் அமைச்சராகியுள்ளதும், 32 பேர் உள்ள அமைச்சரவையில் ஏழு பேர் என்பதும்கூட இப்படி பேசப் படுவதற்கான காரணங்களாக இருக்கலாம்.

இதேபோன்றதொரு பேச்சு, நாடாளுமன்றத் தனித் தொகுதிகளில் பெரும்பாலானவற்றை பா.ஜ.க. கைப்பற்றி, ஒன்றிய அமைச்சரவையில் பட்டியல் சாதியினர் ஆறு பேர் அமைச்சராக்கப்பட்டபோதும் எழுந்தது. ஆனால், அவர்கள் அம்பேத்கரியத்தையோ தலித் நலன்களையோ முன்னெடுக்காமல், இந்துத்துவத்தைப் பட்டியல் சாதியினரிடம் கொண்டுசேர்க்க, ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சி நிரலில் சேவகம் செய்துவருவது கண்கூடு.

ஆகவே, எண்ணிக்கையைப் போலவே அந்தப் பொறுப்பில் இருப்பவர்கள் யாருக்காக எவ்விதம் செயலாற்றப்போகிறார்கள் என்பதும் முக்கியமாகிறது.

இந்த விவாதத்தில் நழுவிப்போகும் ஒரு விசயம், மக்கள்தொகையில் மிகக்குறைவேயான பார்ப்பனர்களில் இருவர் அமைச்சராக்கப்பட்டிருப்பது. ஒருவேளை கூடுதலாகச் சிலர் வென்றிருந்தால், அவர்களும்கூட அமைச்சர்களாக்கப்பட்டிருப்பார்கள் போலும். வெற்றிபெற்ற இருவருமே அமைச்சர்களாக்கப்பட்டிருப்பதும், 32 பேர் அமைச்சரவையில் இருவர் என்பது அவர்களது விகிதாச்சாரத்தை அதிகரித்துள்ளதும் கூடுதலான பிரதிநிதித்துவமாகிறது. இது, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அறிமுகமானபோது 12 காலியிடங்களில் இரண்டு பார்ப்பனர்களுக்கு என்று கொடுக்கப்பட்டதையும், அதை பெரியார் எதிர்த்ததையும் நினைவூட்டுகிறது. மேலும், இந்து அறநிலையத் துறையைக் கலைக்க வேண்டும் என்று சுயநல நோக்கில் கோரிவரும் ஒரு சமூகப் பிரிவிலிருந்து ஒருவர் அந்தத் துறைக்கு அமைச்சராக்கப்பட்டிருப்பது தற்செயலான தில்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ஹாஜி ஏ.எம்.சதக்கத்துல்லா



### பூகம்ப நிவாரண நிதியும் புன்னகைத் தலைவரும்…

2001-ஆம் ஆண்டு, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து, குஜராத் பூகம்ப நிவாரண நிதியாக ரூ.இரண்டு இலட்சம் வழங்கினேன். அப்போது நான், பூவிருந்தவல்லி நகராட்சி உறுப்பினராகவும் தி.மு.க. கிளைச் செயலாளராகவும், பூவிருந்தவல்லி பொது வியாபாரிகள் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பில் இருந்தேன். மாடிக்குச் சென்று தலைவரைச் சந்தித்து நிதி கொடுக்க வந்ததைக் கூறியதும், ‘கொடுய்யா’ என்றார். என்னுடன் வணிகர்களும் வந்திருக்கிறார்கள் என்றதும், கீழே வந்து அனைவரையும் சந்தித்துப் பெற்றுக்கொண்டார். இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போதெல்லாம், தலைவர் கலைஞருடன் அவ்வப்போது கழகப் பணி தொடர்பாக அடிக்கடி சந்தித்த நினைவுகள் அத்தனையும், மனத்தில் மலர்ந்து உற்சாக உந்துதலை ஏற்படுத்தும்.

**- ஹாஜி ஏ.எம்.சதக்கத்துல்லா,**
**மாநிலப் பொருளாளர்,**
**தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு,**
**கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 78**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நாடக சகாப்தம்!

1934-இல் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் ‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’ நாடகம் இயக்க மேடைகளில் நடைபெற்றது. ஆனால், அதன்பிறகு சுயமரியாதை இயக்கத்தின் சார்பில், புதிய நாடகங்கள் எவையும் மேடையேற்றப்படவில்லை. ஒன்பது ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, 1943-இல் ‘சந்திரோதயம்’ நாடகம் நடைபெற்றது. அதிலிருந்துதான் இயக்க மேடைகளில் நாடக சகாப்தம் தொடங்கியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900